www.Padasalai.Net

# இரண்டாம் பருவ இடைத்தேர்வு – 2022

வகுப்பு – 11

## பொதுத்தமிழ்

காலம் : 1.30 மணி

மதிப்பெண் : 50

**I. பலவுள் தெரிக.** 7 x 1 = 7

1. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று .........
   அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
2. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தேர்க.
   அ. விரியன் - 1. தண்டை
   ஆ. திருகுமுருகு - 2. காலாழி
   இ. நாங்கூழ்ப்புழு - 3. சிலம்பு
   ஈ. குண்டலப்பூச்சி - 4. பாடகம்
   அ. 3 4 2 1 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2
3. ஈறுபோதல், முன்னின்ற மெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல் .......
   அ) மூதூர் ஆ) வெற்றிடம் இ) நல்லாடை ஈ) பைந்தளிர்
4. *"ழ"* என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது *"கவிதைக் கிரீடம்"* என்று போற்றப்படுவது.
   அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்
   இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை
5. *ஜனப்பிரளயம்* என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது
   அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
6. அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன் – யார்யாரிடம் கூறியது.........
   அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்
   இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
7. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க ...........
   அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

**II. குறுவினா. ஏதேனும் இரண்டுக்கு விடையளி.** 2 x 2 = 4

8. இந்தியக் கட்டடக்கலையின் மூன்று வகைகள் யாவை?
9. நாழிக்குள் திணிக்கும் மருந்து போல்' என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.
10. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

**III. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 x 2 = 6

11. தமிழ்ச் சொல்லாக்குக. அ. சன்மார்க்கம் ஆ. வித்துவபாலசபை
12. பொருள் தருக. அ. நாங்கூழ் ஆ. ஆலாலம் இ. மணி ஈ. ஏமம்
13. இலக்கணக் குறிப்பு : அ. மாண்ட தவளை ஆ. நன்னாடு
14. பகுபத உறுப்பிலக்கணம் தருக : அ. துய்த்தல் ஆ. உண்டான்
15. கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net

**IV. சிறுவினா** **2 x 4 = 8**

16. பிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?
17. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?
18. பெருங்காடு, உழுதுழுது – பிரித்துப் புணர்ச்சிவிதி எழுதுக.

**V. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2 x 4 = 8**

19. இலக்கிய நயம் பாராட்டுக : *"தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க தெண்திரை எழினி காட்ட, தேம்பிழி மகரயாழின் வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ "*
20. விடுபட்ட இடத்தில் அடுத்து வர வேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.
    1. தனிமொழி – அறிவு ; .................... – வண்ணமயில் ; பொதுமொழி – ....................
    2. கார்காலம் – .................; குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை ; ................. – மார்கழி, தை
    3. எழுத்து, சொல், ..............., யாப்பு, .................
    4. சேரன் – வில், சோழன் – ...................., ................. – மீன்
21. அ) மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.
    1. மதில் மேல் பூனை 2. கானல் நீர்

    ஆ) ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச்சொற்களை எழுதுக.
    1. Personality 2. Escalator 3. Apartment 4. Horticulture

**IV. ஏதேனும் இரண்டனுக்கு விடை தருக. நெடு வினா.** **2 x 6 = 12**

22. "கல்லும் கதை சொல்லும்" என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக. (அல்லது)
    சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.
23. பாரதிதாசன் ஒரு `புரட்சிக்கவி' என்பதை உதாரன் பாத்திரம் வரயிலாக மெய்ப்பிக்க.
    (அல்லது)
    சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுதுக.

**VII. மனப்பாடப் பாடல்** **3 + 2 = 5**

24. அ. ``*சிற்றூரும் வரப்பெடுத்த*" எனத்தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.
    ஆ. ``*செயல்*" என முடியும் குறள்.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com
CamScanner